# கருப்பு வெள்ளை

Karuppu Vellai

**மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரல்..!**

கருப்பு : 01 — 2021 ஜூலை - 24 — வெள்ளை : 04


# கற்பிட்டி பிரதேச கோவிட்–19 தடுப்பூசி ஏற்றல் சிறப்பிதழ்

## கற்பிட்டியில் ஹஜ் பெருநாளைக்கு முன்னும், பின்னும் பொதுமக்களுக்கு ஏற்றப்பட்ட கோவிட் - 19 தடுப்பூசி

(எமது விஷேட செய்தியாளர்)

கற்பிட்டி பிரதேச செயலக பிரிவின் கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய எல்லைக்குட்பட்ட சகல கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்காக கொண்டு வரப்பட்ட 36,292 கோவிட் - 19 ∴பைசர் தடுப்பூசி ஏற்றும் முதல் நாள் வேலைத்திட்டம் ஹஜ் பெருநாளைக்கு முந்திய தினம் (2021.07.20) கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள 12 பாடசாலைகள் மற்றும் கற்பிட்டி ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது. எனினும் அன்றைய தினம் கோவிட் - 19 ∴பைசர் தடுப்பூசியை 50 சதவீதத்திற்கும் குறைவானவர்களாளே ஏற்றிக்கொள்ளப்பட்டது. இதனையடுத்து அன்றைய தினம் கோவிட் - 19 பைசர் தடுப்பூசியை போட தவறியவர்களுக்கு ஜூலை 22 ம் திகதி மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன் இதற்காக கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய எல்லைக்குள் நான்கு இடங்கள் தெரிவுசெய்யப்பட்டது.

கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், கண்டக்குளி முஸ்லிம் மகா வித்தியாலயம், நுரைச்சோலை தேசிய பாடசாலை, உலுக்காப்பள்ளம் முஸ்லிம் மகா வித்தியாலயம் என்பனவாகும். முதல் நாளை விடவும் இரண்டாம் நாள் அதிகமான பொது மக்கள் வருகை தந்ததனால் தடுப்பூசி பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் பலர் வீடுகளுக்கு திருப்பி அனுப்பபட்டனர். புத்தளம் மாவட்டத்திற்கு ஒரு வார காலத்திற்குள் மீண்டும் ஒரு இலட்சம் தடுப்பூசிகள் கிடைக்க பெற உள்ளதாகவும் அது கடைத்தவுடன் கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தடுப்பூசி ஏற்றாத 30 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் கோவி ட் 19 தடுப்பூசி ஏற்றப்படும் என்பதுடன் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான தடுப்பூசி ஜூலை 26 ம் திகதி வழங்கப்பட உள்ளதாகவும் கற்பிட்டி சுகாராத வைத்திய அதிகாரி காரியாலய வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.





# கருப்புவெள்ளை
Karuppu Vellai

மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரல்..!

கருப்பு: 01 2021 ஜூலை –24 வெள்ளை: 04


## பள்ளிவாசல்துறையில் கோவிட் 19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வுகள்





### அன்பார்ந்த வாசகர்களுக்கு... அஸ்ஸலாமு அலைக்கும் வணக்கம்....

எல்லாப் புகழும் இறைவனுக்கே.. இறைவனின் பெரும் அருளால் நான்காவது 'கருப்பு வெள்ளை' பத்திரிகையின் மின்னிதழ் கற்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற கோவிட் 19 ஃபைசர் தடுப்பூசி ஏற்றல் நிகழ்வுகளின் சிறப்பிதழாக வெளிவருகின்றது. 'அல்ஹம்துலில்லாஹ்'

### வணிகமும் வாழ்க்கையும்

வணிகனின் வாழ்க்கை சுலபமானது அல்ல. இதில் வெற்றி பெறுபவர்கள் ஒரு சிலரே. ஏனெனில், பலரிடம் ஒரு சிறந்த வணிகனாகும் திறமைகள் இருந்தும் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. காரணம் அவர்கள் தங்கள் பாதையில் ஏற்பட்ட தடைகளை விரோதிகளாக கருதினர்.

உண்மையில், அவைதான் நமக்கு உதவி செய்யும் நண்பர்கள். வர்த்தகம் என்று அல்ல: எல்லாத் தொழில்களிலுமே போராட்டங்களுக்கும், தோல்விகளுக்கும் பிறகே வெற்றி கிட்டும். ஏன் தெரியுமா? ஒவ்வொரு போராட்டமும், ஒவ்வொரு தோல்வியும் உன்னையும், உன் போராடும் சக்தியையும் வலுப்படுத்தும். அவை-களை நீ நண்பர்களாக கருதி மேலே செல்லலாம். அல்லது விலகியும் போகலாம்.

ஒவ்வொரு எதிர்ப்பும் , நீ முன்னேற ஒரு வாய்ப்பு, அதைக் கண்டு அஞ்சி ஓடினால், நீ உன் எதிர்காலத்தைத் தூக்கி எறிகிறாய்.

இன்ஷா அல்லாஹ் மீண்டும் ஐந்தாவது. இதழில் வந்து உங்களுடன் கலக்கும் வரை....


எம்.எச்.எம் சியாஜ்
பிரதம ஆசிரியர்.




## கண்டக்குழியில் கோவிட் 19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு



(புகைப்பட உதவி - அன்வர் சதாத்)




# நுரைச்சோலையில் கோவிட் 19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வுகள்






புகைப்பட உதவி

- எம்.ஏ.சீ.ஏ முத்தலிப் (அதிபர்)
- எச்.எம் றசீன் (பிரதி அதிபர்)
- எஸ்.எச்.எம். நபீஸ் (பகுதித் தலைவர்)

# உச்சமுனையில் கோவிட் 19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வுகள்





(புகைப்பட உதவி - தினேஷ் பெர்னாந்து)






# கற்பிட்டியில் கோவிட் 19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வுகள்

## சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம்




(புகைப்பட உதவி - றிஸ்வி ஹுசைன் –FB)

## ஆதார வைத்தியசாலை




(புகைப்பட உதவி - நவ்பர் மற்றும் ARMA)

## அல் - அக்ஸா தேசிய பாடசாலை




(புகைப்பட உதவி - றிஸ்வி ஹுசைன் –FB)







உங்கள் ஆலோசனைகள், கருத்துக்கள், விமர்சனங்கள், படைப்புக்கள், ஆக்கங்கள், எழுத்துக்கள், உங்கள் கிராம செய்திகள் எதுவானாலும் தரமானவைகளுக்கு களம் அமைத்து தர நாம் தயார் ஆக்கம் எழுத்துருவிலோ.. அல்லது குரல் பதிவாகவோ.. இருக்கலாம் உடன் எமது வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.




இவ் கருப்புவெள்ளை மின்னிதழ் கற்பிட்டியைச் சேர்ந்த எம்.எச்.எம்.சியாஜ் என்பவரால் 2021.07.24 ல் வெளியீடப்பட்டது.